# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 8779/SCIC/2024**

திரு K.M.G. அசன் அப்துல் காதர் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்,
பூக்கடை காவல் மாவட்டம்,
சென்னை 600 001

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 18.04.2024 |
| 2. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 25.05.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 01.07.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், காவல் துணை ஆணையர் அலுவலகம், ஜார்ஜ் டவுண், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 18.04.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில், 19.10.2020 தேதியிட்டு இணையவழியில் அனுப்பிய புகார் மனு தொடர்பாக 7 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திரு அக்பர் அப்துல் காதர், உதவி காவல் ஆணையர், உயர்நீதிமன்றம் சரகம், சென்னை என்பவர் உரிய அனுமதி கடிதத்துடன் ஆணையத்தில் நேரில்

ஆஜரானார். **மிகவும் அவசரமான தவிர்க்க முடியாத சூழல் ஏதும் இருந்தாலன்றி, பொதுத் தகவல் அலுவலர் தவறாமல் ஆணையத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது.**

4. மனுதாரரின் 18.04.2024 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கும் 25.05.2024 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)ன் கீழான மேல்முறையீட்டு மனுவிற்கும் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலரால் உரிய காலத்திற்குள் எந்தவித தகவல்களும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லையென்பது தெளிவாகிறது. **எனவே, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் தகவல்களை வழங்குவது தொடர்பாக, அச்சட்டத்தின் விதிகளை பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர்கள் தவறாமல் பின்பற்றவேண்டும் என்றும், தவறினால் சட்டத்தின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது.**

5. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் 23.08.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அப்பதிலில் மனுதாரரின் மனுவில் கோரிய அனைத்து இனங்களுக்கும் தகவல்கள் சட்டப்பிரிவு 8(1)(j)ன் கீழ் மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரரின் மனுவில் கோரிய புகாரானது மனுதாரரின் குடும்ப உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டது என்ற விவரம் இன்றைய விசாரணையின்போதுதான் தெரியவந்துள்ளது. அதுகுறித்து, மேற்படி விவரமானது தங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும் பட்சத்தில் மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்களை மூன்றாம் தரப்பு தகவல்கள் என்று மறுக்காமல் அவற்றிற்குரிய தகவல்களை வழங்கியிருக்கலாம் என்பதை பொதுத் தகவல் அலுவலர் சார்பில் இன்றைய விசாரணைக்கு ஆஜரான அலுவலர் ஆணையத்தின் முன் எடுத்துரைத்தார்.

5. எனவே, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனுவிற்கு ஆவணங்களின்படி சரியான மற்றும் இனவாரியான தகவல்களை 30.09.2026 தேதிக்குள் விரைவுத்தபால் மூலம் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் 30.09.2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. **இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8779/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்,
பூக்கடை காவல் மாவட்டம்,
**சென்னை** 600 001

**மனுதாரர்**

திரு K.M.G. அசன் அப்துல் காதர்,
கதவு எண்.17/52, புதுத்தெரு,
முதல் தளம், மண்ணடி,
**சென்னை** 600 001

TK/PS